Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 தை 11 வெள்ளிக்கிழமை (24-01-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 58

# தெரிவுக் குழுவின் பணிக் காலம் மேலும் இரண்டு மாதங்கள் நீடிப்பு!

## உள்ளூராட்சி தேர்தல் குறுக்கிடுவதாக தெரிவிப்பு

கொழும்பு, ஜனவரி 24

அதிகாரப் பரவல் திட்டத்தை ஆராய்ந்து வரும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு, அத்திட்டம் சம்பந்தமான வரைவுக்கு இறுதி வடிவம் கொடுக்கும் பணியைப் பூர்த்தி செய்வதற்கான காலம், மார்ச் மாதத்திலிருந்து மே மாதத்துக்கு — மேலும் 2 மாதங்களுக்கு — நீடிக்கப்படும்.

தமது இந்த முடிவை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தமிழ்க் கட்சிகளின் தலைவர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் நேற்று முன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினர், அப்போதே ஜனாதிபதி இத்தகவலை அவர்களிடம் கூறினார்.

தென்னிலங்கையில் மார்ச் மாதம் 27 ஆம் திகதி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறவுள்ளன. அதனால் தெரிவுக்குழு திட்டமிட்டபடி மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அதிகாரப் பரவல் திட்டத்தின் வரைவுக்கு இறுதி வடிவம் கொடுக்கும் பணிகளைப் பூர்த்தி செய்ய முடியாது. அதனாலேயே அதற்கான காலத்தை மேலும் 2 மாதங்களால் நீடிக்க முடிவு செய்யப்பட்டதாகவும் தமிழ்க் கட்சித் தலைவர்களிடம் தெரிவிக்கப்பட்டதாம்.

இந்தச் சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் எம். சிவசிதம்பரம் மற்றும் நீலன் திருச்செல்வம், ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா, புளொட் தலைவர் த. சித்தார்த்தன், இ தொ கா. சார்பில் பி. பி. தேவராஜ், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் மற்றும் ஹக்கீம் ஆகியோர் பங்குபற்றினர்.

ஜனாதிபதிக்கு உதவியாக

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப காற்றில பறந்த வாக்குறுதிகளில் இதுவும் ஒன்று எண்டு சொல்லுங்கோ!

# கிறீஸிலிருந்து திரும்பிய 29 தமிழர் விசாரணைக்காகத் தடுத்துவைப்பு!

கொழும்பு, ஜன. 24

கடந்த டிசம்பர் 24 ஆம் திகதி மத்தியதரைக்கடல் பகுதியில் ஏற்பட்ட கப்பல் விபத்தில் உயிர் தப்பி கிறீஸ் நாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கைத் தமிழர்களில் 29 பேர் நேற்று விமான மூலம் கொழும்பு வந்து சேர்ந்தனர்.

கிறீஸ் நாடு இவர்களை நாடு கடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் கட்டுநாயக்கா விமான நிலையம் வந்தடைந்ததும் பொலீஸாரினால் தடுத்து வைக்கப்பட்டுவிசாரணை நடைபெறுகிறது.

உயிர்தப்பிய இலங்கைத் தமிழர்களில் 22 பேர் கிறீஸில் அரசியல் தஞ்சம் கோரி உள்ளனர்.

நேற்று இலங்கை வந்தவர்களில சிலருக்கு அம்மை நோய் கண்டிருப்பதாக வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது. (இ 5)

# பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு இலங்கைக்கு கருணாநிதி எச்சரிப்பு

சென்னை, ஜன. 24

''தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினால் தாக்கப்படும் விவகாரம் தொடர்பாக பொறுமையோடு இருக்கிறோம் பொறுமைக்கும் ஓர் எல்லைஉண்டு'' இப்படி தமிழக முதல்வர் மு. கருணாநிதி எச்சரித்துள்ளார்.

சென்னை தொலைக்காட்சிச் சேவைக்குநேற்று அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறினார்.

தமிழ் நாட்டு மீனவர்களை ஸ்ரீலங்கா கடற்படையினர் சுட்டு வீழ்த்துவதும், அவர்களது படகுகளை பறிமுதல் செய்வதும் தொடர்ந்துநடைபெற்று வருகின்றன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா அகதிகள் பிரச்சினை: ஜனாதிபதி மாநாடு கூட்டுகிறார்

கொழும்பு, ஜன. 24

வவுனியா தடுப்பு முகாம்களில் உள்ள அகதிகள் நிலை குறித்து ஆராய விசேட மாநாடு ஒன்றை ஜனாதிபதி கூட்டவிருக்கிறார்.

ஜனாதிபதியைச் சந்தித்த தமிழ்க் கட்சிகள் வவுனியா தடுப்பு முகாமில் உள்ள மக்களின் அவலம் குறித்து எடுத்துக் கூறிய போதே ஜனாதிபதி இது குறித்துத் தெரிவித்தார்.

பாஸ் வழங்குவது தொடர்பாக இருந்துவரும் கெடுபிடிகள், அகதிகள் பிரச்சினை போன்ற விடயங்கள் குறித்து ஆராய இந்த மாநாடு கூட்டப்படும் என்றும்—

இந்த மாநாட்டுக்கு வவுனியா அரச அதிபர் மற்றும் செயலக அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், பொலீஸ் அதிகாரிகள் அழைக்கப்படுவர் என்றும்— ஜனாதிபதி தெரிவித்தார். (இ-150-3)

## உள்ளூராட்சித் தேர்தல் மார்ச் 27 நடக்கும்

கொழும்பு, ஜன. 24

தென்பகுதியில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் மார்ச் 27 ஆம் திகதி நடைபெறும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் தமிழ்க்கட்சிகளுடன் நடந்த சந்திப்பின் போதே அவர், இதனைத் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் அடுத்த மாதம் 5 ஆம் திகதியில் இருந்து 12 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்று தேர்தல் ஆணையாளர் நேற்று முன்தினம் அறிவித்திருந்தார். (இ-3-150)

# மூழ்கிய "கிபிர்" விமானத்தில் றொக்கட்டுகள், குண்டுகள்!

கொழும்பு, ஜன. 24

கட்டுநாயக்காவில் உள்ள விமானப்படைத் தளத்தில் இருந்து றொக்கட்டுக்கள், குண்டுகள் மற்றும் ஆயுதங்கள் ஆகியவற்றுடன் வடபகுதி யுத்த களத்துக்கு புறப்பட்ட இரு 'கிபிர்' விமானங்களில் ஒன்றே நீர்கொழும்பு வாவியில் வீழ்ந்து நொருங்கியது என்று கொழும்பு செய்தி ஏஜென்ஸிகள் நேற்று தகவல் வெளியிட்டன.

விமானத்தில் ஏற்பட்ட ஏதோ ஒரு தவறு காரணமாகவே இந்த விபத்து நிகழ்ந்தது. விமானமோட்டியான எஸ். ஆர். ஏ. டி. மெல் பரசூட் மூலம் குதித்து உயிர்தப்பினார்.

7 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கும் போதே இந்த விமானம் விழுந்தது. இதனுடன் புறப்பட்ட மற்றைய 'கிபிர்' விமானம் உடனடியாக கட்டுநாயக்க தளத்துக்கு திரும்பி விட்டது.

விபத்துக்குள்ளான விமானத்தின் அகலம் 4. 55 மீற்றர் நீளம் 15 65 மீற்றர் ஆகும்.

ஓர் ஆசனம் மட்டும் விமானத்தில் உள்ளது விமானம் மணிக்கு 480 மைல் வேகத்தைக் கொண்டது.

வாவியில் விழுந்த போது விமானத்தில் இருந்த பொருள்கள் வெடிக்காதது அதிர்ஷ்டமே என்று தெரிவிக்கப்பட்டது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வை-12ஐ புலிகள் சுட்டிருக்கலாம் விமானப் படைத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 14

'கடந்த திங்கட்கிழமை பலாலி விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டுக் காணாமற் போன வை. 12'' ரக இராணுவ போக்குவரத்து விமானம் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் எழுந்துள்ளது.

இப்படி விமானப்படைத் தளபதி ஒலிவர் ரணசிங்க 'த ஐலண்ட்' பத்திரிகைக்குதெரிவித்துள்ளார்.

கடந்த பல வருடங்களாக இந்த விமானம் எந்த வித கோளாறும் இன்றி செயற்பட்டுள்ளது. 34 ஆயிரம் மணித்தியாலங்கள் வரை இந்த விமானம்பறந்துள்ளது.

இந்த விமானத்தின் விமானியும் பொறுப்புணர்ச்சியுடன் செயற்படக் கூடிய திறமை வாய்ந்தவர்.

இப்படி ஒலிவர் ரணசிங்க தெரிவித்தார்.

நீர்கொழும்பு வாவியில் விழுந்த இஸ்ரேல் தயாரிப்பு கிபிர் விமானம் குறித்து அவர் தெரிவிக்கையில் 'அந்த கிபிர் விமானத்தின் என்ஜின் நல்ல நிலையிலேயே இருந்தது அது விழுந்த காரணம் தெரியவில்லை'' என்றார்.

அந்த விமானத்தின் விமானி தற்போது கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் 72

( 8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் என்று கூறி கொள்ளை; பொலீஸார், ஊர்காவலர் கைது

கொழும்பு, ஜன. 24

புலிகள் என்று கூறி மூவர் கொண்ட குழு திருகோணமலை கிண்ணியாவில் 65 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள், பணம் ஆகியவற்றை கொள்ளையிட்டது.

இது குறித்து விசாரணை நடத்திய பொலீஸார் ஒரு றிசேர்வ் பொலீஸார், ஒரு ஊர்காவலர் மற்றும் முன்னாள் ஊர்காவலர் ஆகியோரை கைது செய்தனர்.

இவர்கள் திருமலை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (இ-150-3)

## முக்கிய அறிவித்தல்

**"கனகு கறாஜ்"** பலாலி றோட், திருநெல்வேலி.

எம்மிடம் திருத்த வேலைக்குவிடப்பட்ட சகல வாகனங்களையும் அதன் உரிமையாளர்கள் **31-1-97** க்கு முன்னர் அகற்றுமாறு கேட்டுக் கொள்கிறோம். அகற்றப்படாத வாகனங்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**பொ. கனகரத்தினம்**
உரிமையாளர்

(44869)

## வாழ்த்துகின்றோம்

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற நவாலி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆசிரியர் **நவரெத்தினத்தின்** புதல்வி

**செல்வி இந்துஷா** வையும்

அவருக்குக் கற்பித்த அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

முன்னாள் விதானையார் குடும்பம்

நவாலி வடக்கு. (44872)

## சுவாமி விவேகானந்தரது யாழ்ப்பாண வருகையின்

# நூற்றாண்டு விழா

## 1897 -- 1997

இடம்: இராமகிருஷ்ணாலயம், திருநெல்வேலி.
காலம்: 1997-01-24 வெள்ளிக்கிழமை
மாலை 3-00 மணி

★ சுவாமி விவேகானந்தரின் யாழ். விஜய நூற்றாண்டு ஞாபகார்த்த படிப்பகம் திறந்து வைத்தல்
**திரு. சு. ஸ்ரீதரன்**
(பிரதேச சபை, நல்லூர்)

★ "சுவாமி விவேகானந்தரின் வருகையும் மறுமலர்ச்சியும்" நூல் வெளியீடு
தலைமையுரையும், நூல் வெளியீடும்
**திருமதி சி. இராமநாதன்**
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ். வலயம் II)

★ மதிப்பீட்டுரையும் யாழ். வருகை நூற்றாண்டு தின உரையும்
**திரு. மா. வேதநாதன்**
(யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்)

★ நூல் வெளியீட்டுரை:
**கவிஞர் காரை. எம். பி. அருளானந்தன்**
(ஆசிரியர், யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்)

★ நன்றியுரை:
**திரு. இ. ராஜா மகேந்திரசிங்கம்**
(இயக்குநர், இராமகிருஷ்ணாலயம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**சுவாமி விவேகானந்தர்** யாழ். வருகை நந்த
**100ஆவது ஆண்டு விழா**
சிறந்திட வாழ்த்துவோர்
**பேபி போட்டோ**
**நிறுவனத்தார்**
உங்கள் மழலைச் செல்வங்களின் உயிரோவியமான படங்களுக்கு
**பேபி போட்டோ**
பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
(சி-3988)

## கிரிக்கெட் மத்தியஸ்தர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ். மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (உ)

## நினைவஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 24

பன்னாலை சேர். கனக சபை அ.த.க. பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றிய முன்னாள் அதிபர் வ. கருணாகரன் அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணி முதல் இணுவில் காரைக்கால் சிவன் கோயிலடியில் தற்போது இயங்கி வரும் மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். (இ-4)

## டிப்ளோமா பரீட்சை அனுமதி அட்டை

யாழ்ப்பாணம், ஜன. 24

தேசிய கல்வி நிறுவக டிப்ளோமா பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை எதிர்வரும் 25 ஆம் திகதி தமது நிலையங்களில் சிரேஷ்ட விரிவுரையாளரிடம் பெற்றுக் கொள்ளுமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டுள்ளனர். (இ-5)

## தாதியர் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன. 24

தாதியர் தெரிவுப் பரீட்சையில் சித்தி அடைந்தோருக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 29 ஆம் திகதி யாழ் போதனா வைத்திய சலையில் நடைபெறும்.

தெரிவுப்பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுடைய பெயர்ப்பட்டியல் வைத்திய சாலை நுழைவாயிலில் ஒட்டப்பட்டு உள்ளதாகவும் — நேர்முகப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டையை பணிப்பாளரிடம் அவரது பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் — தெரிவிக்கப்படுகின்றது.

நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிப்பவர்கள் சகல ஆவணங்களுடனும் வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (இ-5)

## யாழ். இந்துவில் விவேகானந்தர் விழா

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ் இந்துக்கல்லூரி இந்து இளைஞர் கழகம் ஏற்பாடு செய்துள்ள சுவாமி விவேகானந்தரின் யாழ். இந்துக்கல்லூரி விஜயம் நூற்றாண்டுப் பூர்த்திவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணி முதல் யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும். (இ-4)

## புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு **5** மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பிற்பகல் 1-30 மணிக்கு நடைபெறுகின்றது.

வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியர்:
**பா. கிருபாகரன்**
(விசேட பயிற்சி கணிதம்)
**றேடியன்ற் கல்வி நிலையம்**
(செட்டி... [illegible])
(44870)

# மரண அறிவித்தல்கள்

## அகஸ்ரீன் அல்வீனஸ் (ஜெனம்)

(ஊழியர், குகன் ஸ்ருடியோ)

பருத்தித்துறையைச் சேர்ந்த அகஸ்ரீன் அல்வீனஸ் (23 - 01 - 97) வியாழக்கிழமை காலமானார்.

இவர் மைக்கேல் அகஸ்ரீன், சிசிலா தம்பதிகளின் அன்பு மகனும், டோரா ராஜேஸ்வரியின் (ஆசிரியை, பருத்தித்துறை மெதடிஸ்த பாடசாலை) அன்புக்கணவரும், கெப்ஸிபா றூத், எஸ். டி. அல்வீனஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், அனில்டா, றூபி, கிறேஸ், ஜெசி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (24 - 01 - 97) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இலங்கை பெந்தக்கோஸ்தே சபை பருத்தித்துறையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
**டோரா ராஜேஸ்வரி**
(மனைவி)

செட்டித்தெரு,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(44859)

## விசுவலிங்கம் கந்தசாமி

சுன்னாகம் மலப்பையைப் பிறப்பிடமாகவும், கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவுங் கொண்ட விசுவலிங்கம் கந்தசாமி காலமானார்.

இவர் சின்னம்மாவின் அன்புக்கணவரும் கிருஷ்ணலிங்கம் (இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்), கிருஷ்ணவேணி, கமலவேணி, புஷ்பராணி, இந்திராணி, மகாலட்சுமி, செல்வரத்தினம் (ஆசிரியர், யூனியன் கல்லூரி), சரஸ்வதியம்மா, உலகநாதன் (இல. போ. சபை), வயிரவநாதன் (லங்கா சிமெந்து லிமிட்டெட்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24-01-97) வெள்ளிக்கிழமை 12.00 மணிக்கு மயிலணியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**க. கிருஸ்ணலிங்கம் (மகன்)**
(இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்)

(9197)

## கணபதிப்பிள்ளை மாணிக்கம்

(பிரபல அடகு கடை, வர்த்தகர் நயினாதீவு)

நயினாதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை மாணிக்கம் 23 - 01 - 1997 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும், கனகம்மாவின் அன்புக் கணவரும், லங்காதேவி, சியாமளாதேவி, நாகேஸ்வரி, இராசேந்திரம், வடிவழகு, கமலவேணி, சுதாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வராஜா, இராமலிங்கம், ஸ்ரீதரசிங் (அதிபர், பூபாலசிங்கம் புத்தகசாலை), அமிர்தலிங்கம், முருகதாஸ், வசந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கந்தையா, காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை, இராமலிங்கம், காலஞ்சென்ற பொன்னம்மா, தங்கம்மா, பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு இல. 20, விவேகானந்தா றோட், இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பொரல்ல மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பூ. ஸ்ரீதரசிங்**
(மருமகன்)

இல, 3 ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(44861)

## திருமதி அன்னம்மா தம்பிராசா

வேலணை மேற்கு தலைகாட்டி அன்னம்மா தம்பிராசா நேற்று (23-1-97) வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வேலணை மேற்கு சின்னையா - இளையபிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், தலைகாட்டி கார்த்திகேசு - செல்லம் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புச் சகோதரியும், ஞானானந்தம் (கனடா), சிவசுப்பிரமணியம் (கொழும்பு), காலஞ்சென்ற சிவலிங்கம், சண்முகநாதன் (கொழும்பு நாதன் அன் கோ), மகாலிங்கம் (K. T. M மின்தறி ஆலை உரிமையாளர், வைமன் வீதி), காலஞ்சென்ற கனகசுந்தரம், தவமணி, பரமசிவம் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாக்கியலட்சுமி, மரகதம், பரமேஸ்வரி, பத்மாவதி, வரதலட்சுமி, சிவநாதன் (சிவம் ரெக்ஸ்), விமலா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (24-1-97) பிற்பகல் 2 மணியளவில் (பழைய நேரம்) 37, வைமன் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**K. T. சண்முகநாதன்,**
**K. T. மகாலிங்கம்**
(பிள்ளைகள்)

37, வைமன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(44871)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் Nallur Branch Library

A MARVELLOUS SHOW

# திருமறைக்கலாமன்றம்

நடத்தும்

சிற்பக்கலைஞர் A. V. ஆனந்தன்

அவர்களின்

AN EXCELLENT EVENT

# சிற்பக் கண்காட்சி

## ஆனந்தன் ஓர் அற்புதச் சிற்பி

''மண்ணிலும் கல்லினும், மரத்தினும் சுவரினும் கண்ணிய தெய்வதம் காட்டுநர் வகுக்க'' என்ற மணிமேகலை வரிகள், மாண்ட வீரனின் உருவம் தாங்கிய வீரக்கல் நடும் பழக்கம் இருந்த சங்ககாலம் தொட்டு, கருங்கல் சிலையிலும், கல்லிலும் இசை கண்ட மன்னர் ஆட்சியூடாக, சமகால நிகழ்வுகளை மெழுகிலும், மரத்திலும், அரக்கிலும், கல்லிலும் உருவ வடிவங்களில் சமைக்கும் இன்று வரை சிற்பக் கலை—மூவளவைக் கூறுகளால் உருவம் அமைக்கும் அழகுகலை — தமிழர் கலைகளில் நுண்மை மிக்க ஒன்றாக விளங்கி வந்ததை; வருவதை உணர்த்து கின்றன.

திரு. ஏ. வி. ஆனந்தன் திருமறைக் கலாமன்றம் தொடங்கிய அறுபதுகளின் நடுப்பகுதியில் நடிக னாகவே அறிமுகமானவர். இறைமகன் இயேசுவின் பாத்திரத்தை நடிப்பதில் அவருக்கு இணை அவரே தான். காலப்போக்கில் பலரும் வியக்கும், கண்ணைக் கவரும், மேடை அமைப்புகளை ஆக்கித்தந்தார்.

இன்று, அவரது கைகள் படும் மரத்துண்டுகள் பேசுகின்றன; அவரது உளி தொடும் மரக்கட்டை கள் இசைபாடுகின்றன. விஸ்வாமித்திரரின் தவம் குலைந்த நிலையும், அரிச்சந்திர மன்னனின் ஆண் டித் தோற்றமும், சகுந்தலாவின் சித்திர நடையும், சமகால நிகழ்வுகளின் அச்சமும், அவலமும் அழுகை யும் நம்மை ஈர்க்கும்; மணிக்கணக்கில் அவை பற் றிச் சிந்திக்கத் தூண்டும்.

பரிசுத்த தந்தை இரண்டாவது அருளப்ப சின் னப்பர் இலங்கைக்கு வருகை தந்தபோது, ஆனந்த னின் சிற்பம்தான் அவருக்கு யாழ் மறை மாவட்டத் தின் சார்பில் அன்பளிப்புச் செய்யப்பட்டது என்ப தைப் பலர் அறியாதிருக்கலாம். ஆனந்தன் என்ற அற்புதச் சிற்பியின் கைவண்ணத்தை நம்மவரும் வெளிநாட்டவரும் பார்த்துப் பயன் பெற வேண் டும் என்ற நமது மன்றத்து நோக்கின் முதற்கட்டம்—யாழ். மண்ணில் மன்றம் நடத்தும் இக் கண்காட்சி.

- பேராசிரியர். நீ. மரியசேவியர் அடிகள்.

## நிகழ்ச்சி நிரல்

காலம்: 25, 26, 27, 28 ஜனவரி 97

நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 5-00 மணி வரை (இலங்கை நேரம்)

இடம்: மறைக்கல்வி நிலையம் (பிரதான வீதி, யாழ்ப்பாணம்)

காட்சியை தொடக்கி வைக்கும் கனவான்கள்

25-1-97 கலாநிதி க. குணராசா அவர்கள் (பிரதேச செயலர், யாழ்ப்பாணம்)

26-1-97 Dr. S. சிவயோகம் அவர்கள் (உளவியல் மருத்துவ அதிகாரி)

27-1-97 அருட்சகோதரி யோலன் அவர்கள் (அதிபர், திருக்குடும்ப கன்னியர்மடம்)

28-1-97 ஓவியர் ரமணி அவர்கள் (கல்வித் திணைக்களம்)

கருத்தரங்கு 28-1-97 காலை 11.00 மணி

தலைவர்: கலாநிதி சோ. கிருஸ்ணராஜா (தலைவர், மெய்யியல் துறை)

கருத்துரை வழங்குவோர்

1. திரு. செ. கிருஸ்ணராஜா - விரிவுரையாளர்
2. திரு. பா. அகிலன் அவர்கள்
3. ஓவியர் ரமணி அவர்கள்

நிறைவு விழா 28-1-97 மாலை 4-00 மணி

தலைமை: மேதகு ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை

தினமும் மாலையில் கலை நிகழ்ச்சிகள்.

**பிரவேசம் இலவசம்**



## வளர்க அவர் கலை!

கல்லிலே
கலைவண்ணம்
கண்டார்
அன்று.
மரங்களை
மானிடராய்
பேச வைத்தார்
ஆனந்தன்
இன்று.
வளர்க
அவர் கலை
என்றும்!

- திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள்.

## 'றெட்பானா' வாழ்த்துகிறது

கலை மனித உள்ளத்தை ஆற்றுப்படுத்தும் ஓர் அரிய பொக்கிஷம். வருந்தும் உள்ளத்திற்கு அது ஒரு நல் மருந்து. இன்றைய சூழ்நிலையில் இந்த மண்ணில் இத்தகைய நிகழ்வுகள் உண்மையிலேயே வரவேற்கப்பட வேண்டியவை. கலைஞன் A. V. ஆனந்தனின் காலத்தால் அழியாத கலைவடிவங் களுக்குப் பெருமையும், புகழும், பாராட்டும் சேர்க் கும் வண்ணம் திருமறைக் கலாமன்றம் நடத்தும் இந்தச் சிற்பக் கண்காட்சி உண்மையிலேயே ஒரு சரித்திரம் பேசும் நிகழ்ச்சி. கலைவழி இறைபணி மட்டுமல்ல; கலைவழி உள நெறித் தொண்டும் புரி யும் மன்றத்தினரையும், படைப்பாற்றல் மிக்க இக்கலைஞனையும் எமது ஸ்தாபனம் பாராட்டுகின் றது.

திருமதி ஒ. ஜி. அல்பிரட்
(திட்ட இணைப்பாளர், 'றெட்பானா' யாழ்ப்பாணம்.)

## கலைவண்ணம்

திருமறைக் கலாமன்றத்தின் மூத்த உறுப்பினரா கத் திகழும் திரு A. V ஆனந்தன் அவர்கள் மல்லாகத் தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வாழ்வின் தன்னம்பிக்கையோடு எல்லா செயற்பாடுகளையும் முன் னெடுத்துச் செல்பவர். இவரது ஊக்கமும் உழைப்பும் எதையும் கூர்ந்து நோக்கி செயற்படும் தன்மையும் இவரை வாழ்வின் ஓர் உயர்ந்த கலைஞனாகப் படைத் திருக்கிறது. ஆனந்தன் அவர்கள் மரங்களில் வடித்திருக் கும் சிற்பங்கள் மரம் என்ற அந்தமூலப்பொருளை மறைத்து நிற்பதைக் காணலாம்.

ஆனந்தன் மரத்தில் வடித்திருக்கும் சிற்பங்கள் ஒவ்வொன்றும் ஆயிரம் மொழி பேசும் விந்தைமிகு சிற்பங்களாக விளங்குகின்றன. அவரது சிற்பங்கள் கலை உயிர்த்துடிப்போடு விளங்குவதைக் காணலாம்.

ம. யேசுதாஸன்
இசையாசிரியர் (தி. ம. க. ம.)


## வாழ்த்துகின்றோம்

காலம் பகைத்தாலும் கடமையே கண்ணாய் நின்று
கற்பித்த ஆசிரியர் குழாத்தினரையும்,
உறுதி குலையாது நின்று உயர்ந்த பெறுபேறுகளைப்
பெற்ற மாணவச் செல்வங்களையும்,
47 வீதமான பெறுபேறுகளைப் பெற்று முன்னணியில்
திகழும் பாடசாலையை மேலும் வளர்த்தெடுப்பதில்
அதிக ஆர்வத்துடன் பணியாற்றும் அதிபரையும்,
1996 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் கண்டு
களிப்புற்று வாழ்த்துகின்றோம். வாழ்க! வளர்க!

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**யாழ். இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலை.**

(9198)



## வெள்ளிவிழா நாளில் வாழ்த்துகின்றோம்

ஆசிரியப்பணியில் 25 ஆண்டுகளைப்
பூர்த்தி செய்து வெள்ளிவிழாக்காணும்
எமது பாடசாலை அதிபர்

**திருமதி த. அ. துரைசிங்கம்**

அவர்களை வாழ்த்துகின்றோம்.
கல்விப்பணி தொடர்க! கல்லூரி வளம் பெறுக!

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
(9199) யாழ். இந்துமகளிர் ஆரம்பப்பாடசாலை.


## இலங்கையர் 51 பேர் நாடு திரும்புவர்

கொழும்பு, ஜன. 24

கிரேக்கத்தில் பொலீஸா ரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 51 இலங்கையரும் நேற்று இலங்கை திரும்புவார்கள் என எதிர்பார்க்கப் பட்டது.

இவர்களில் 41 பேர் தமி ழர் என்பது குறிப்பிடத்தக் கது.

இலங்கை வெளிநாட்டலு வல்கள் அமைச்சு எடுத்த நடவடிக்கையை அடுத்தே இவர்கள் விடுதலை செய்யப் பட்டிருக்கின்றார்கள்.

கடந்த மாதம் கிறிஸ்மஸ் காலத்தில் கிரேக்கத்துக்குள் சட்ட விரோதமாக நுழைய முயற்சித்த சமயம் படகு விபத்தில் நூற்றுக்கும் அதிக மானோர் உயிரிழந்ததும் —

விபத்தில் சிக்காமல் தப்பிய 149 வெளிநாட்டவர்கள் பின் னர் கிரேக்கப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டதும் தெரிந்தவையே.

அவர்களில் இலங்கைய ரான 51 பேர் விடுவிக்கப் பட்டு இலங்கைக்குத் திரும்ப இருக்கின்றனர். (உ-3)

## தொண்டாவின் நம்பிக்கை

சென்னை, ஜன. 24

இலங்கை இனப்பிரச்சி னைக்கு அரசியல் வழிமுறை கள் மூலம் தீர்வு காணலாம் என்று அமைச்சர் எஸ். தொண்டமான் கூறினார்.

தமிழகம் வந்துள்ள அவர் மதுரையில் செய்தியாளர் களிடம் பேசியபோதே இத னைத் தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினை யைத் தீர்ப்பதில் இராணுவ நடவடிக்கையோ, அல்லது வெளிநாட்டுத் தலையீடோ உதவிடாது என்றும் அவர் கூறினார். (இ-3)


## நன்றி நவிலல்

### சீவரெத்தினம் உதயகுமார் (கலட்டிக் கண்ணன்)

எமது அருமையான குடும்பத் தலைவன் சீவரெத் தினம் உதயகுமார் (கலட்டிக் கண்ணன்) அகால மர ணம் அடைந்தமையைக் கேள்வியுற்று அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டு பல வழிகளிலும் உதவியளித்த வர்த்தகப் பெருமக்களுக்கும், அவருக்கு கண்ணீர் அஞ்சலியைப் பத்திரிகை மூலம் தெரிவித்த கலட்டி அம்மன் கோயில் நிர்வாக சபையினருக்கும், இறுதிக் கிரியையின்பொழுது பங்கு கொண்டு அவரது மறைவுக்குத் தம் அனுதாபத்தை வழங்கிய உற்றார், உறவினர் மற்றும் யாவர்க்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

-குடும்பத்தினர்.

கலட்டிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(44865)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுவாமி விவேகானந்தர் இலங்கை வி

# 1897 ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சே



**அதி வணக்கத்துக்குரிய**
**சுவாமி வீரேஸ்வரானந்தர் மகராஜ்**
*10 ஆவது தலைவர், ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன், கல்கத்தா*

## சமர்ப்பணம்

ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை,
24-1-97.

பேரன்புடைய ஸ்ரீராம கிருஷ்ணமிஷன் மூத்த துறவிகளுக்கும், பக்தர்களுக்கும்,

எங்களுடைய தாழ்மையான வணக்கம்.

சுவாமி விவேகானந்தர் இலங்கை விஜய நூற்றாண்டு விழாவில் எங்களின் பங்களிப்பு நிறையவும் இருக்கும்.

இன்று பிளவுபட்டுள்ள மக்களிடையே மீண்டும் சமாதானம், சாந்தி, ஒற்றுமை தழைக்க உதவக் கூடியவர் சுவாமிஜியை விட வேறு எவரும் இல்லை. அவரது அருள் மொழிகளை விட வேறு எதுவுமில்லை. ஆகவே ஆத்மபூர்வமாக சுவாமிஜியைப் போற்றுவோம்.

அடியேனை ஆட்கொண்ட தூய அன்னை ஸ்ரீசாரதா தேவியையும் அவரது உத்தமசீடரான அகில உலகளாவிய ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் பத்தாவது தலைவர் வணக்கத்துக்குரிய சுவாமி வீரேஸ்வரானந்தரையும் தொழுது அவர்தம் திருப்பாதங்களில் இம்மலரைச் சமர்ப்பிப்பதில் பெரிதும் மகிழ்ச்சியும் நிறைவும் அடைகின்றோம்.

யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களுக்கும் மற்றும் பல்கலைக் கழகத்தின் அனைத்து சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்கும், பாடசாலை அதிபர்களுக்கும் மற்றும் ஏனையோர்க்கும் எங்கள் — நல்வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் உரித்தாகுக.

ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் இலங்கை கிளை உபதலைவர். நமது அன்புக்குரிய ஸ்ரீமத்சுவாமி ஆத்மகணானந்தர் மகராஜ் அவர்களுக்கு எங்கள் அஷ்டாங்க நமஸ்காரத்துடன் இதனை எழுதி நிறைவு செய்கிறோம்.

இறைபணியில்,
அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் அடியவன்
சுவாமி சித்ருபானந்தா.

## யாழ்ப்பாணத்தில் சுவாமியின் உரை

நமது மதம் அனைவருக்கும் இடம் கொடுக்கின்றது. எவரையும் நிராகரிப்பதில்லை. நமது ஜாதிமுறை மதத்துடன் சேர்ந்ததாகத் தோன்றினாலும், உண்மையில் அது மதத்துடன் சம்பந்தப்பட்டதல்ல. ஜாதிகள் நம் சமூகத்தைக் காப்பாற்றுவதற்காக ஏற்பட்டவை. அவை அவசியமில்லாமல் போகும் போது ஜாதிகளும் தாமாகவே மறைந்துவிடும். நம்மதத்தைப்பற்றி இன்று நான் உங்களுக்குச் சொல்ல விரும்பியதைச் சொல்லிவிட்டேன். தற்காலத்திற்கு மிக அவசியமான ஒரு விஷயத்தை உங்களுக்கு ஞாபகப்படுத்தி இப்பேச்சை முடிக்க விரும்புகிறேன்.

மகாபாரதத்தை எழுதியவரான வேதவியாசர் சொல்லுகிறார்: இந்தக் கலியுகத்தில் மிக அரிய சாதனை ஒன்றிருக்கிறது; மற்ற யுகங்களில் அனுஷ்டிக்கப்பட்டு வந்த தபோ முறைகளும் யோக அனுஷ்டானங்களும் இக்காலத்தில் அனுஷ்டிக்கக் கூடியனவாகவில்லை என்பதால் —

இக்காலத்தில் நாம் செய்யக் கூடிய உயர்ந்த சாதனை தானதர்மம் தான். தானம் அனைத்திலும் உயர்ந்தது ஆத்மீக அறிவு புகட்டுதலாகும். அதற்கு அடுத்தது லௌகிக அறிவு. இதற்கடுத்தது ஒருவனுடைய உயிரைக் காப்பாற்றுதல். கடைசியாக உணவும் நீரும் அளித்தல்.

ஆத்மீக ஞானம் அளிப்பவன் ஆத்மாவைப் பலபிறவிகளிலும் பிறந்துழலாமல் காப்பாற்றுகிறான். லௌகிக அறிவு கொடுப்பவன் ஆத்மீக அறிவைப் பெறுவதற்கு வழிகாட்டுகிறான். மற்றத் தானங்களனைத்தும் — உயிரைக் காப்பாற்றுதல் கூட — இவைகளுக்குத் தாழ்ந்தவையாகவேயிருக்கின்றன. ஆதலால் ஆத்மீக அறிவு புகட்டுதலே நாம் ஆற்றக்கூடிய பணிகள் அனைத்திலும் சிறந்ததென்பதை நீங்கள் உணர வேண்டும்.

அதுதான் எல்லா உதவிகளிலும் பெரிய உதவி. நம்முடைய சாஸ்திரங்கள், ஆத்மீகப் பேரின்பவெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் வற்றா ஊற்றுக்களாக இருக்கின்றன. துறவு நிறைந்த இந்நாட்டில்தான் ஆத்மாவை அனுபவத்திற் கண்டறிந்த அறிஞர்கள் பலர் இருக்கிறார்கள். நான் உலகம் முழுவதும் சுற்றிப்பார்த்திருக்கின்றேன்; நான் சொல்லுவதை நம்புங்கள், மற்ற நாடுகளில் மதத்தைப்பற்றிப் பலர் பேசலாம்; ஆனால் மதக் கொள்கைகளை வாழ்க்கையில் பின்பற்றி அனுஷ்டிப்பவர்கள் இங்குதானிருக்கிறார்கள். பேச்சு மதமாகாது. கிளிபேசும்; இப்பொழுது இயந்திரங்களும் பேசுகின்றன.

பூரணமான துறவும், ஆத்மீக உணர்ச்சியும், அந்நெறியிலே தோன்றும் கஷ்டங்களைச் சகிக்கும் தன்மையும், எல்லையற்ற அன்பும் — இவைதான் — ஆத்மீக வாழ்க்கையின் அறிகுறிகளாம். இவ்வளவு உயர்ந்த கருத்துக்களும், அவைகளைத் தங்கள் வாழ்க்கையில் பின்பற்றும் பெரியோர்களும் நம் நாட்டில் நிறைந்திருக்கும் போது, இந்த உயர்ந்த இலட்சியங்களை நம் நாட்டில் பணக்காரன், ஏழை, உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பேதமின்றி அனைவரிடமும் பரப்புவதுடன், வெளிநாடுகளிலும் பரப்பாமலிருப்பது பாவமாகும். இதுவே நமது கடமைகளில் தலைசிறந்ததாகும்.

[1897 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆம் திகதி சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆற்றிய உரையில் இருந்து தொகுக்கப்பட்ட சிறு பகுதி.]

## சுவாமிஜியின் கொழும்பு உரை

[விவேகானந்த சுவாமிகள் அமெரிக்காவில் சர்வமத மகாசபையில் வெற்றி பெற்று, அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் சுற்றுப்பிரயாணம் செய்து, இந்தியாவுக்குத் திரும்பும்போது கொழும்பில் இறங்கினார். அதுசமயம் இலங்கை வாசிகள் அவருக்கு ஒரு மகத்தான வரவேற்புக் கொடுத்தார்கள். அதற்குப் பதிலாக, மேல் நாட்டிலிருந்து திரும்பிய பிறகு அவர் செய்த முதல் பிரசங்கம் இது.]

என்னால் மேல் நாட்டில் செய்யப்பட்டிருக்கும் வேலை என்னிடத்திலுள்ள யாதொரு சக்தியாலும் செய்யப்பட்டதல்ல. நம்முடைய அன்பு நிறைந்த புனிதமான தாய்நாட்டிலிருந்து எனக்குக் கிடைத்த உங்கள் ஆசியாலும் அன்பாலும் தான் அது செய்யப்பட்டதென்று சொல்ல வேண்டும். மேல் நாடுகளில் கொஞ்சம் நல்ல வேலை செய்யப்பட்டிருக்கின்றதென்பது உண்மை. அவ்வேலையின் பயனைவிட அது எனக்கு அதிகப் பயனை அளித்திருக்கிறது.

முன்னால் ஏதோ ஓர் உணர்ச்சியின் காரணமாக நான் நம்பியிருந்தது, நிச்சயமான, பிறருக்கு நிரூபித்துக் காட்டக்கூடிய உண்மையென்பதை நான் இப்பொழுது உணருகின்றேன். எல்லா இந்துக்களும் நினைக்கிறமாதிரி, நம்முடைய இந்த நாடு புனிதமான கர்ம பூமியென நானும் நினைத்திருந்தேன். இன்று அது முற்றிலும் உண்மையென்ற உறுதியுடன் உங்கள் முன் நிற்கிறேன்.

உலகில் எந்த நாடாவது புண்ணிய பூமியென்று கொள்ளத்தக்கதாயிருந்தால், மனித ஆத்மா கடவுள் தன்மையை ஒருவருக்கொருவர் சகித்துக்கொள்ளுதல் இந்தியாவில் தானிருக்கிறது; வேறெங்குமில்லை. இங்குதான் இந்துக்கள் முகம்மதியர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் மசூதிகளும் கோயில்களும் கட்டுகிறார்கள்.

வெளிநாடுகளுக்குச் சென்று முகம்மதியர்களை அல்லது மற்ற மதத்தினர்களை உங்களுக்காகக் கோயில் கட்டித்தரச் சொல்லிப் பாருங்கள்! கட்டித் தருவதற்குப் பதிலாகக் கட்டிய கோயிலை உடைப்பதற்கும், முடியுமானால் உங்களையும் அழிப்பதற்கும் அவர்கள் முயற்சி செய்வார்கள். மற்ற மதங்களைச் சகித்தல் என்ற அரிய தத்துவத்தை உலக மக்கள் அவசியம் உணரவேண்டும். சகிப்புத்தன்மை மாத்திரமல்ல, அனைவரிடமும் அன்புடன் ஒழுகுதல் என்ற இந்த மகத்தான கருத்தை இந்தியாதான் அவர்களுக்கு அளிக்க முடியும்.

''பல ஆறுகள், பல்வேறு மலை யுச்சிகளில் உற்பத்தியாகி, பலவிதமாக - நேராகவோ வளைந்தோ ஓடி, ஒரே சமுத்திரத்தில் விழுகின்றதுபோல், மக்கள் தங்கள் பல்வேறு சுபாவங்களின் காரணமாக பல்வேறு துறைகளில் முயற்சி செய்து, கடைசியில், சிவபெருமானே! உன்னையே வந்தடைகிறார்கள்'' என்று மகிம்ன ஸ்தோத்திரத்தில் வெகு அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

வேறு வேறு துறைகளில் சென்றாலும் எல்லோரும் ஒரே இடத்திற்குத்தான் செல்லுகிறார்கள். சிலர் வளைந்து செல்லலாம்; சிலர் நேராகச் செல்லலாம்; ஆனால் அனைவரும் ஒரே ஆண்டவனைத்தான் அடைகின்றார்கள். எப்பொழுது, சிவபெருமானை

(7 ஆம் பக்கம் பார்க்க)

## சுவாமி… விஜயத்தி…

15 ஜனவரி 1897 —

16 ஜனவரி — மாலை…

17 ஜனவரி — மாலை…

18 ஜனவரி — மாலை…

19 ஜனவரி — காலை…

20 ஜனவரி — காலை…

21 ஜனவரி — காலை…

24 ஜனவரி — காலை…

25 ஜனவரி — மாலை…

26 ஜனவரி — நண்ப…

## சேவாச்ச… ஒரே பா…

★ பின்தங்கிய …

★ துணுக்காயி… திட்டம். முதல் கட்ட…

★ செம்பியன்ப… குன்றிய இடங்களில் …

★ எங்களது சே… இவ்வாண்டில் நடை… ருக்கு அர்ப்பணிக்கப்…

★ குடாநாட்டு… னைகளை கருத்தரங்…

★ சுவாமி விவே… யம் ஒன்றை அமைத்…

★ சுவாமியின் … சமய சமூகப் பணிக…


"கீழ்ப்படிவதை அறிபவனே கட்டளையிடவும் அறிவான். முதலில் கீழ்ப்படியக் கற்றுக்கொள்! ஒன்றாகக் கூடிவாழ்வதே நமக்கு வேண்டுவது"
**ஜமுனா ஸ்ரோர்**
நெல்லியடி.

''உலகிற்கு நன்மை செய்வதே நமது நோக்கம். நமது பெயர்களைப் பறை சாற்றுவதல்ல''
**ராஜன் சைக்கிள் வேக்ஸ்,**
மருதடி, பருத்தித்துறை.

'ஒரே ஒரு மனிதனுக்கு நல்வழியில் பயிற்சி அளிப்பதற்காக நூறாயிரம் பிறவிகளை எடுப்பதற்கும் நான் தயாராக இருக்கின்றேன்.'
**றோயல் எலக்ரோனிக் எலக்ரிக்கல்**
பெருந்தெரு, பருத்தித்துறை

'பெருமை கொள்! தியாகமின்றிப் பெரும்பணிகள் எதையும் செய்ய இயலாது.'
**சுசுல் ரெக்ஸ்ரைல்ஸ்**
மெயின் வீதி, பருத்தித்துறை.

"அன்புதான் வாழ்க்கை… வெறுத்து ஒதுக்குவ… ணம் என்றுதான் … வேண்டும்."
**மங்களம் ரான்ஸ்போட்**
(நிரஞ்சிதா)
உரிமையாளர்: சோ. மங்க…
வல்லிபுரம் வீதி, பருத்தித்…

"மக்கள் தொண்டே மகேசன் சேவை."
**நகர புடைவையகம்,**
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

''ஜீவ சேவையே சிவபூஜை.''
**பூபாலசிங்கம் புத்தகசாலை,**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

''மனிதர்களை உருவாக்கும் கல்வியை நான் பெரிதும் விரும்புகிறேன்.''
**ராஜன் பின்னல் அகம்**
(பல்பொருள் அங்காடி)
286, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

"சுயநலம் கொண்டதே தீய ஒழுக்கம்; சுயநலம் அற்றதே நல்லொழுக்கம்."
**ராஜன் வீடியோ மூவிஸ் சென்ரர்,**
பழைய பஸ்நிலையம், பருத்தித்துறை.

''மரணம் வரும் வ… வேலை செய். நான் உ… இருக்கிறேன்.....''
**குகன் ஸ்ருடி…**
2 ஆம் குறுக்குத்…
பருத்தித்துறை,


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# ..க விஜய நூற்றாண்டு விழாச் சிறப்புமலர்
# ..தா சேவாச்சிரமம், பருத்தித்துறை 1997

## சுவாமியின் இலங்கை விஜயத்தின் அட்டவணை

| | |
|---|---|
| ஜனவரி 1897 — | பி. ப. 6.00 கொழும்பு வருகை. பொதுமக்களால் வரவேற்கப் பட்டார். வரவேற்புரையும் நிகழ்த்தப்பட்டது. |
| ஜனவரி — மாலை | ''இந்தியா ஒரு புண்ணிய பூமி'' என்ற தலைப்பில் முதலாவது சொற்பொழிவை ''ஃப்ளோரல்'' மண்டபத்தில் (தற்போதைய 'எம்பயர்' படமாளிகை) நிகழ்த்தினார். |
| ஜனவரி — மாலை | கொச்சிக்கடை பொன்னம்பல வாணேஸ்வரர் ஆலயத்திற்கு விஜயம். |
| ஜனவரி — மாலை | ''வேதாந்த தத்துவம்'' பற்றிய இரண்டாவது சொற்பொழிவை நிகழ்த்தினார். |
| ஜனவரி — காலை | 11.20க்கு ரெயிலில் கண்டியை அடைந்தார். அங்கு மாபெரும் வரவேற்பு வழங்கப்பட்டு, வரவேற்புரையும் நிகழ்த்தப்பட்டது. பின்னர் மாத்தளைக்குச் சென்று அன்றைய இரவைக் கழித்தார். |
| ஜனவரி — காலை | யாழ்ப்பாணம்நோக்கிப்பயணம் இரவுப் பொழுதை மாட்டு வண்டியில் கழித்தார். |
| ஜனவரி — காலை | அனுராதபுரத்தை அடைந்தார். போதிமரத்தின் நிழலில் சிறு சொற்பொழிவொன்றை நிகழ்த்தினார். பயணம் தொடர... வவுனியாவில் வரவேற்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். |
| ஜனவரி — காலை | யாழ்ப்பாணத்தை அடைந்தார். முறையான வரவேற்பு வழங்கப்பட்டது. |
| ஜனவரி — மாலை | ஆயிரக்கணக்கான மக்களுடன் மின்சூள் (டோர்ச்லைட்) விளக்கொளியில் நகரிலிருந்து யாழ். இந்துக்கல்லூரியை நோக்கி ஊர்வலமாகச் சென்றார். 'சமயம்' என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவையும் நிகழ்த்தினார்' |
| ஜனவரி — நண்பகல் | இந்தியாவுக்கு நீராவிப் படகில் பயணமானார். |

## ..சேவாச்சிரமப் பணிகள் ..ரே பார்வையில்....

★ பின்தங்கிய மாணவர்களுக்கு புலமைப் பரிசில்.

★ துணுக்காயில் ''விவேகானந்தபுரம்'' வீட்டுத் ..டம். முதல் கட்டமாக 100 வீடுகள் அமைத்தல்.

★ செம்பியன்பற்று, மந்துவில் போன்ற அபிவிருத்தி ..றிய இடங்களில் பணி செய்தல்.

★ எங்களது சேவாச்சிரம கோயில் கும்பாபிஷேகம் ..வாண்டில் நடைபெறும். அது சுவாமி விவேகானந்த ..கு அர்ப்பணிக்கப்படும்.

★ குடாநாட்டுக் கல்லூரிகளில் சுவாமிஜியின் சிந்த் ..களை கருத்தரங்குகள் மூலம் பரப்புதல்.

★ சுவாமி விவேகானந்தரின் பெயரால் நூல் நிலை ஒன்றை அமைத்தல்.

★ சுவாமியின் யாழ். விஜய நூற்றாண்டை ஒட்டிய ..ய சமூகப் பணிகளை மேலும் விஸ்தரித்தல்.



நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவனாகவே ஆகி விடுவாய்.

-- சுவாமி விவேகானந்தர்

## விவேகானந்தர் பாலர் பாடசாலை

பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கமும் றோட்டறக்ட்கழகமும் இணைந்து விவேகானந்தர் பாலர் பாடசாலையை இன்று பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத் தெருவில் அங்குரார்ப்பணம் செய்கிறார்கள்.

சுவாமி விவேகானந்தர் யாழ்.

## விஜயத்தின் நூற்றாண்டு நினைவு பொதுக்கூட்டம்

**இடம்:** வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
**காலம்:** 25 - 01 - 97 சனிக்கிழமை
**நேரம்:** பிற்பகல் 4 மணி

தலைவர்: சுவாமி சித்ரூபானந்தா

வரவேற்புரை: திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம் (பிரதம நூலகர், பரு. பிரதேச சபை, புலோலி, பொது நூலகம்)

பிரதம விருந்தினர்:
செல்வி அன்னபாக்கியம் கனகரத்தினம் (அதிபர், வட இந்து மகளிர் கல்லூரி)

★ சொற்பொழிவுகள்.

★ பக்தி இசை விருந்து

சுவாமி விவேகானந்தரின் திருவுருவப்படம் பி. ப. 3 - 30 மணிக்கு புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்திலிருந்து மங்கள இசை, பஜனையுடன் ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

பருத்தித்துறை
இந்து இளைஞர் சங்கம்
நடத்தும்

## எழுச்சி விழா

வீர இளைஞர்களே திரண்டு வருக!
விவேகானந்தர் புகழ்பாடுவோம்; நலம் பெறுவோம்!

இடம்: புலோலி பசுபதீஸ்வரர் ஆலய வெளி மண்டபம்

காலம்: 24-01-97 (வெள்ளிக்கிழமை)
சுவாமி விவேகானந்தர் தமது
புனித பாதங்களை யாழ். மண்ணில் பதித்த
நூற்றாண்டு நாள்
நேரம்: பி.ப 4- 15 மணி

**நிகழ்ச்சிகள்:**

1. திருமறை பாராயணம்
2. சொற்பொழிவுகள்:

★ செல்வி அ. கனகரத்தினம் (அதிபர், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)

★ திரு. ஆ. சிவநாதன் (ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி)

பிற்பகல் 3.30 மணிக்கு சுவாமி விவேகானந்தரின் திருவுருவப்படம் மருதடி ஞானவைரவர் கோயிலிருந்து மங்கள இசை, பஜனையுடன் ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்படும். வடமராட்சியில் உள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களும் ஊர்வலத்துக்கும் விழாவுக்கும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.


..புதான் வாழ்க்கையாகும். ..த்து ஒதுக்குவதை மர.. என்றுதான் சொல்ல ..டும்.''
..ம் ரான்ஸ்போட் சேவிஸ் (நிரஞ்சிதா)
..பாளர்: சோ. மங்களநாதன்
..புரம் வீதி, பருத்தித்துறை.

''யாருடைய நெஞ்சு ஏழை மக்களுக்காகத் துயரத்தில் அழுமோ, அவனையே நான் மகாத்மா என்பேன். அன்றேல் அவன் துராத்மாவே.''
சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை,
நெல்லியடி.

''எல்லாக் கேடுகளுக்கும் முக்கிய காரணம் பிரிவு மனப்பான்மையே. எனது சகோதரர்களுக்கு நான் உதவுவேனாக! நான் தேடுவதெல்லாம் இதுவே.''
ஜானகி ரெக்ஸ்ரைல்ஸ்,
பருத்தித்துறை.

''மரணம் வரும் வரையிலும் வேலை செய்'' நான் உன்னுடன் இருக்கின்றேன்.
சுகுணலக்ஷ்மி
ரெக்ஸ்ரைல்ஸ்,
பருத்தித்துறை.

''மிகப் பெரிய உண்மை இது. வலிமைதான் வாழ்வு, பலவீனமே மரணம்.''
★ நல்லூர் ப. நோ. கூ. சங்கம்.
★ ஓர் அன்பர்.
★ சீமாட்டி, யாழ்ப்பாணம்.
★ சிவகணேசன் பட்டுச்சோலை, யாழ்ப்பாணம்.

..ணம் வரும் வரையிலும் ..ல செய். நான் உன்னுடன் ..கிறேன்.....''
..ன் ஸ்ரூடியோ
..2 ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை,

'இவ்வுலகம் கோழைகளுக்கல்ல; ஓடமுயலாதே! வெற்றியையோ தோல்வியையோ எதிர்பார்க்காதே!
திருவீடியோ விஷன்,
மூத்த விநாயகர் கோயிலடி,
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

'அற்பமாக உள்ள எதையும் நாடாதே! அதை உன்: கால் விரல்களாலும் தொடாதே.''
கட்டைவேலி-நெல்லியடி
ப.நோ.கூ. சங்கம்
கரவெட்டி.

''தானங்களில் மிக உயர்ந்தது ஆத்மீகதானம்''
எஸ்.எம். பெர்னாண்டோ
கண்ணாடி வழங்குபவர்கள்
580, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

விரிவடைய முயலுங்கள்! உயிருக்கு ஒரே அறிகுறி; அசைவே வளர்ச்சி என்பதை நினைவில் கொள்ளுங்கள்!''
சேகர்ஸ்
நெல்லியடி, கரவெட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இறைச்சிக் கோழி (Broiler) மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 154' கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். குறிப்பு: காலை 8.30 மணி வரை சுத்தம் செய்து கொடுக்கப்படும்.
(9194)

### திருமண சேவை

அன்னசத்திர ஒழுங்கையில் இயங்கிய விநாயக திருமண சேவை தற்பொழுது இல, 128, பருத்தித்துறை வீதி. ஆனைப்பந்தியில் இயங்குகின்றது. திருமணங்களுக்கு ஜாதகத்துடன் நேரில் / கடிதமூலம் இயக்குநரைச் சந்திக்கவும். சுவாமியார் இராசகுலசிங்கம். (44836)

## அனுமதி இன்றி கள் உற்பத்தி தடை

யாழ்ப்பாணம், ஜன, 24

கரவெட்டி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க தொழில் பாதிப்புக்கு உட்பட்ட பகுதிகளில் சங்கத்தின் அனுமதியின்றி கள் உற்பத்தியில் ஈடுபடுவது தடைசெய்யப்படுவதாக கரவெட்டி ப.தெ.வ அ.கூ. சங்க பொது முகாமையாளர்தெரிவித்துள்ளார்.

அனுமதிக்கப்பட்ட சங்கத்தின் தவறணைகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் கள் விற்பனை செய்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

(இ-5)

## தட்டச்சாளர் தேவை

தமிழ், ஆங்கிலம் சிறந்த முறையில் செய்யக்கூடிய தட்டச்சாளர் தேவை

"தங்கை றோணியோ"
நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.
(பிறவுண் வீதிக்கு அண்மையில்)
(44838)

யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

## அதிபரை வாழ்த்துகின்றோம்!

எமது பாடசாலையில் ஆசிரியையாக இருந்து அதிபராகப் பதவி உயர்வு பெற்ற

**திருமதி தனரஞ்சனி துரைசிங்கம்**

அவர்களை

**ஆசிரியர்களும், மாணவர்களும். பாராட்டுகின்றோம்**

(9195)

## பதவி வெற்றிடம்

தென்னிந்திய திருச்சபை
யாழ்ப்பாண அத்தியட்சாதீனம்

மேற்படி நிறுவனத்தில் பணிபுரிய அனுபவமுள்ள ஒரு ஆங்கில தட்டெழுத்து சுருக்கெழுத்தாளர் தேவைப்படுகின்றார்.

இரண்டு நற்சான்றிதழ்களுடன் 07 - 02 - 1997 வெள்ளிக்கிழமைக்கு முன்னர்.

**செயலாளர்,**
தென்னிந்திய திருச்சபை காரியாலயம்,
வட்டுக்கோட்டை என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்குக.
(சி-3966)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 06 — 12 — 1953
மறைவு: 25 — 12 — 1996

அமரர்
**காசிலிங்கம் ஜெயதேவன் (ஜெயம்)**
(முன்னாள் அலுவலர், யாழ். ஹற்றன் நாஷனல் வங்கி)

பாசத்துடனும், பரிவுடனும் வளர்த்த எம் மகனே! எம்மை யெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி, மீளாத்துயில் கொண்டாய். உனது மறைவால் எம் துயர் ஆறாது! உனது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**அம்மா, மனைவி, அண்ணாமார், அண்ணிமார், மாமா, மைத்துனர், மைத்துனி, பெறாமக்கள்.**

''தேவவில்லா'',
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
(44787)

## வாழ்த்துகின்றோம்

ஆண்டு - 5 புலமைப்பரிசிற் பரீட்சை 1996
மேற்படி பரீட்சையில்
**யா/கரணவாய்**
**தாமோதர வித்தியாலயத்திலிருந்து**
மொத்தம் 19 பேர் தோற்றி 8 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர். சித்தியடைந்தமாணவர்கள் விவரம்:

(1) சிறீஸ்கந்தசிங்கம் — மயூரன்
(2) இராசநாயகம் — ரமணேஸ்
(3) கைரியங்கிரிச்செல்வம் — மகிழினி
(4) ரங்கநாதன் — ரத்தினாதேவி
(5) பாலசுந்தரம் — உதயசாந்தி
(6) தர்மகுலராஜா — லாவண்யா
(7) ராஜேஸ்வரன் — அகிலன்
(8) ஜெயக்கொடி — கமலினி

இவர்களை அதிபர், ஆசிரியர், பெற்றோர், நலன் விரும்பிகள் அனைவரும் வாழ்த்துகின்றனர்.

(சி/3990) **பெற்றோர், ஆசிரியர் சங்கம்.**

உ

## மக்கள் சேவையின்... மங்களகரமான 2ஆம் ஆண்டு அகவையில்.... (24 - 01 - 1997)

## ஸ்ரீஐங்கரன் வெதுப்பகம்

(அரசினர் வைத்தியசாலைப் பின்புறம்)
**டச்சு வீதி — சாவகச்சேரி.**

★ விதையாக விழுந்த எம்மை
ஓராண்டு காலத்துள்
விருட்சமாய் வளரவைத்த
உயர்ந்த உள்ளங்கள் அனைத்துக்கும்
★ **எம் நன்றி** ★

★ யாழ். மாவட்ட வெதுப்பக ஒன்றியத் தலைவர், உறுப்பினர்கள், பணியாளர்கள்
★ தென்மராட்சி ஒன்றியத்தின் பெரியோர்கள்
★ சகவெதுப்பக உரிமையாளர்கள்
★ வாடிக்கையாளர்கள் ★ வர்த்தகப் பெருமக்கள்

**அனைவருக்கும் எங்கள் இதய நன்றிகள்!**

★ தரமான வெதுப்பி
★ சகலவித பிஸ்கட் வகைகள்
★ கேக் பேக்கிங், ஐசிங்

உங்கள் மங்கள வைபவங்கள் அனைத்துக்கும் நிதான விலையில் — நியாய வகையில் கைகொடுப்போம்!

**இன்றுபோல் என்றும் உங்கள் ஆதரவு எம்மை அடையட்டும்.**

நன்றி...! நன்றி...! இதய நன்றி...!

**உரிமையாளர், பணியாளர்கள்.**

ஸ்ரீ ஐங்கரன் வெதுப்பகம்,
டச்சு விதி, சாவகச்சேரி.
(44822)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 23 — 01 — 1936
மறைவு: 05 — 02 — 1996

அமரர் நடராஜா செல்வராஜா
(ஓய்வுபெற்ற ஓவசியர், வட்டுக்கோட்டை)
திதி: 24—01—1997

பன்னிரு திங்கள் சென்று மறைந்தும்
பன்னீராயிரம் நினைவுகள் தோன்றி மறையவில்லை!
அன்பின் ஒளி விளக்காய் அழகின் திருவுருவாய்
பண்பிலே சிகரமாய் பார்வையிலே சேவகனாய்
பொறப்புடன் வலம் வந்தாய்! ஆண்டு அறுபது
சிறப்புடன் வாழ்ந்து சென்று விட்டாய்!
என்ன எண்ணிச் செய்திருப்பாய்!
என்ன சொல்ல நினைத்திருந்தாய்! ஏங்குகின்றோம்!
எண்ணி எண்ணி வாடுகின்றோம்!
ஏக்கம் தீர வாழ்வில் இனியேது நிழல் ...?

உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும்:
உரிமையாளர்
**சத்தியா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்,**
வட்டுக்கோட்டை.

(சி/3984)

## நினைவஞ்சலி

12 ஆம் ஆண்டு முதலாம் ஆண்டு





அமரர் சின்னத்தம்பி குணரத்தினம்
( இளைப்பாறிய முகாமையாளர் )
தோற்றம்: 16 — 06 — 1924
மறைவு: 04 — 11 — 1984

திருமதி குணரத்தினம் சிவபாக்கியம்
( இளைப்பாறிய ஆசிரியை )
தோற்றம்: 24 — 10 — 1926
மறைவு: 05 — 02 — 1996

திதி: 24 - 01 - 1997

தங்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரிகள்.**

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.
(9188)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் Nallur Branch Library

# உதயன்

## படித்துப் பாருங்கள்!

இந்து சமயத்தின் வீரத் துறவியாக என்றும் விளங்குபவர் சுவாமி விவேகானந்தர். எங்கள் மதத்தின் அரிய கருத்துக்களையும், அதன் உள்ளார்ந்த தத்துவங்களையும் மேலைத் தேசத்தவர்களுக்கு விளக்கி அதன் சிறப்பை அவர்கள் உணர வைத்த பெருமை சுவாமிஜி அவர்களையே சாரும். அவருக்குப்பின்னர், அத்தகைய பணியை ஆழமாகவும், தாக்கமாகவும் இதுவரை எவரும் செய்ததில்லை.

இந்து சமயத்தின் பெருமையை வேற்று மதத்தவர்களுக்கு எடுத்துச் சொல்லியது மட்டுமன்றி, எங்களுக்குள்ளேயே அதனைப் புரிந்து கொள்ளாதவர்களுக்கும், பிழையாகப் புரிந்து கொண்டவர்களுக்கும் பெரும் ஞான விளக்கமாகத் திகழ்ந்தவர் சுவாமிஜி.

நூற்றாண்டுக்கு நூற்றாண்டு இந்து சமயத்துக்கு அவ்வப்போது கிடைத்த மறுமலர்ச்சியாளர்களில் அவர் குறிப்பிடத்தக்கவர்.

அத்தகைய ஒரு ஞான சூரியன் எங்கள் யாழ்ப்பாணத்து மண்ணில் தமது புனித பாதங்களைப்பதித்து போதனை செய்தது அவர் காலத்தில் வாழ்ந்த எமது முத்தோர் — முன்னோர் — செய்த தவம் மட்டுமன்று; அந்த வகையில் நாமும் ஒரு வகையில்பாக்கியவான்களே

சிவபூமி என்று கருதப்பட்ட யாழ்ப்பாண மண்ணுக்கு அவர் வருகை தந்த நூறாவது ஆண்டு நிறைவு தினம் இன்று அந்த நிறைவு தினம் மிகப்பிரமாண்டமான முறையில் கொண்டாடப்பட வேண்டிய ஒன்று. ஆனால் எல்லாவற்றையுமே கட்டுப்படுத்தும் இன்றைய காலச் சூழ் நிலை அதற்கும் விதி விலக்குத் தரவில்லை. பரவாயில்லை...

அதற்கு மாற்றீடாக அவரது சிந்தனைகளை எமது எதிர்காலச் சந்ததியினரின் பிஞ்சு உள்ளம் என்ற களை முளையா மண்ணில் தூவும் பணியை செய்தாலே போதும் என்று திருப்தி கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அவர் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் புகட்டிய அறிவுரை இன்றும் எம்மவருக்குப் பொருத்தமாக இருக்கிறது.

எங்கள் மத்தியில் மலிந்துள்ள சுயநலம், பொறாமை அடுத்தவனுக்கு உதவாமை ஆகிய குணங்களை சுவாமிஜி நூறு ஆண்டுகளுக்கு முன்னரே தமது அருட் தரிசனத்தால் பார்த்துவிட்டார். என்னே ஆச்சரியம்!

★ கடவுள் ஆராதனை நடக்கும் இடங்களில் கூட நாம் மற்றவர்களுக்கு முன்னால் நிற்க விரும்புகிறோம்.

★ இவனுக்கு ஏன் அதிக மரியாதை கிடைக்கிறது? நான் ஏன் அதைப் பெறக் கூடாது? என்றவாறான பொறாமை எமது மனதில் நிறைந்திருக்கிறது.

★ முதலில் தொண்டர்களாக இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள்; பின்னர் தலைவராகலாம்.

சுவாமிஜியின் யாழ்ப்பாணப் பிரசங்கத்தின் முடிவுரையின் முத்தாக விளங்கும் மேற்கண்ட மூன்று வாக்கியங்கள் இன்றும் கூட எம்மை நாமே சுயவிமர்சனம் செய்து திருந்துவதற்கு உதவக் கூடியவை. அவற்றை மீண்டும் மீண்டும் படித்துப் பாருங்கள். நாம் திருந்துவதற்கு எவ்வளவு உண்டு என்பதனைப் புரிந்து கொள்ளலாம்.

# பொலிஸ் கமிஷன் குறித்து தெரிவுக் குழுவில் இழுபறி!

## முழு நாட்டுக்கும் ஒன்றா? அல்லது தனித்தனியா?

கொழும்பு, ஜன. 24

பிராந்திய சபைகளுக்குத் தனித்தனியாகப் பொலீஸ் கமிஷன் அமைப்பதா? அல்லது முழு நாட்டுக்கும் தனியாக ஒரு பொலீஸ் கமிஷன் அமைப்பதா?

இது குறித்து நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இழுபறி நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை சட்ட ஒழுங்கு பற்றிய விடயம் அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் விவாதிக்கப்பட்டது.

முழு நாட்டுக்கும் ஒரு பொலீஸ் கமிஷனே வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் கோரிக்கை விடுத்தன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதி, பிராந்திய சபைகளுக்கென்று தனித்தனியாகப் பொலீஸ் கமிஷன்கள் அமைக்கப்பட வேண்டும். அக்கமிஷன்களில் சகல இன மக்களின் பிரதிநிதிகளும் இடம்பெற வேண்டும் என்று கூறினார்.

பிராந்திய சபைகளுக்குப் பொலீஸ் கமிஷன் நியமிப்பதாயின் நிதிக் கமிஷனும் பிராந்தியத்துக்கு நியமிக்க வேண்டும் என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிப் பிரமுகர் ரவி கருணாநாயக்க கோரிக்கை விடுத்தார்.

இது பற்றிப் பின்னர் விவாதிக்கலாம் என்று அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

''இன வேறுபாடுகளை நீக்க ஆங்கில மொழி உத்தியோக மொழியாக்கப்பட வேண்டும்'' என்று ரவி கருணாநாயக்க கோரிக்கை விடுத்தார்.

''ஆங்கில மொழியை உத்தியோக மொழியாக்குவதால் நிர்வாகச் செலவுகள் அதிகரிக்கும்'' என்று அமைச்சர் தெரிவித்தார். (இ-150-3)

## கோப்பாய் யுவதி மீண்டும் வெளிநாடு சென்றுவிட்டார்!

கொழும்பு, ஜன. 24

டென்மார்க்கில் இருந்து நாடு கடத்தப்பட்டு இலங்கை வந்த கோப்பாயைச் சேர்ந்த சித்திரா ராஜேந்திரன் மீண்டும் கடந்த வெள்ளிக்கிழமை வெளிநாடு ஒன்றுக்கு சென்றுவிட்டார் என்று தெரியவந்துள்ளது.

டென்மார்க்கில் இருந்து நாடு கடத்தப்பட்ட இந்தப் பெண் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டதும் —

இவர் தொடர்பான செய்திகளைத் திரட்ட இலங்கை வந்த 4 டென்மார்க் பத்திரிகையாளர்களை இலங்கை அரசு நாடு கடத்தியிருந்ததும் — தெரிந்தவையே.

பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்தப் பெண்ணின் கடவுச் சீட்டுக்கள் மற்றும் ஆவணங்கள் கடந்த வாரம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

கடந்த வெள்ளிக்கிழமை அந்தப் பெண் வெளிநாடு ஒன்றுக்குச் சென்றுள்ளார். ஆனால் அவர் எந்த நாட்டுக்குச் சென்றார் என்பது பற்றிய தகவல் எதனையும் அவரது சட்டத்தரணி வெளியிடவில்லை. (இ-3-150)

## புளொட் உறுப்பினர் காயம்

கொழும்பு, ஜன. 24

திருகோணமலையில் புளொட் உறுப்பினர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் கடும்காயமடைந்தார்.

கோயிலடி என்ற இடத்தில் இருந்து கிண்ணியா நோக்கிச் சென்று கொண்டிருந்த சமயம் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

விடுதலைப் புலி உறுப்பினர்களே இத்தாக்குதலை நடத்தினர் என்று படை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-5)

## புதியநடைமுறை

அரச திணைக்களங்களினதும் அரசகூட்டுத்தாபனங்களினதும் அவசரமான கடிதங்களை விமானமூலம் அனுப்புவது குறித்து வடபிராந்திய பதில் அஞ்சல் அதிபர் நாயகம் எஸ். மாணிக்கவாசகர் புதிய நடைமுறை ஒன்றைக் குறிப்பிட்டுள்ளார்

இதன்படி அரச கூட்டுத்தாபன மற்றும் அரச திணைக்களத் தலைவர்கள் தாம் வெளிமாவட்டங்களுக்கு அனுப்புகின்ற அவசர கடிதங்களின் இடது பக்க மேல் மூலையில் ''விமானம்மூலம்'' எனக் குறிப்பிட்டு பிரதம தபால் அதிபருக்கு அனுப்பி வைக்கும்படி அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-5)

## மாஹோவில் பொருள்கள் இறக்கும் பணி

வடமராட்சி, ஜன. 24

மாஹோ கப்பலிலிருந்து முழுமையாக பொருள்களை இறக்கும்பணி கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை துறைமுகத்தில்ஆரம்பமாகியுள்ளது.

அரைகுறையாக பொருள்கள் இறக்கப்பட்ட நிலையில் மாஹோ கப்பல் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக காங்கேசன் துறைமுகத்தில் தரித்து நின்றது தெரிந்ததே.

இதனிடையே பருத்தித்துறையில் பொருள்களை இறக்கி முடித்த சஜித்தா என்ற கப்பல் கடந்த ஞாயிறு மாலை கொழும்பு நோக்கி புறப்பட்டுச்சென்றது. (இ-173)

# இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்படி அதிகாரப் பரவலாக்கல் வேண்டும்

## சுயாதீன பிரஜைகள் குழு கோருகிறது

கொழும்பு, ஜன. 24

1987 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் படி அதிகாரபரவலாக்கல் மேற்கொள்ளுமாறு சுயாதீன பிரஜைகள் குழு அரசாங்கத்தை கேட்டுள்ளது

வடக்கு — கிழக்குக்கு இடைக்கால ஆட்சி ஒன்றை ஏற்படுத்தி தமிழ்ப்பேசும் பிரிவொன்றையும் ஏற்படுத்துமாறு அந்தப் பிரஜைகள்குழு அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறியுள்ளது.

இதன் மூலம் விடுதலைப் புலிகளின் இராணுவ பலத்தை முழுமையாகத் தோல்வியடையச் செய்யலாம் என்று அது சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தக் கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரதி ஒன்றை இந்தியப் பிரதமர் தேவகௌடாவுக்கு அனுப்பி வைக்கப் போவதாக சுயாதீன பிரஜைகள் குழுவின் இணைச் செயலாளர் சரத் டீ. சில்வா தெரிவித்தார்.

இரு நாடுகளின் தலைவர்களும் இந்த விடயம் குறித்து ஆலோசிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயத்தை ஆராய இந்திய — இலங்கைத் தலைவர்கள் பின்வாங்கினால் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் போவதாகவும் அவர் தெரிவித்தார். (உ-3)

## சிவாஜி மீது விசாரணை

சென்னை, ஜன. 24

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் எனக் கூறப்பட்ட சுதாகரனுக்கும் சத்திய லட்சுமிக்கும் நடைபெற்ற ஆடம்பரத் திருமணச் செலவினங்கள் குறித்து சிவாஜி கணேசனிடம் தமிழ்நாடு லஞ்ச ஒழிப்பு அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

சிவாஜி கணேசனின் புத்திரர்களான ராம்குமார், பிரபு ஆகியோர் மீதும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

திருமணச் செலவின விவரங்களை வருமான வரி அதிகாரிகளிடம் ஏற்கனவே அளித்துள்ளதாக சிவாஜி கணேசன் தெரிவித்துள்ளார்.

இதனிடையே நேரில் வந்து சாட்சியம் அளிக்குமாறு சுதாகரனுக்கு நேற்று முன்தினம் தகவல் அனுப்பப்பட்டது. (இ-10)

# வேறு நாட்டின் மத்தியஸ்தத்துக்கு இந்தியா தடையாக இருக்குமா?

## பதில் அளிக்காது குஜ்ரால் மழுப்பல்

கொழும்பு, ஜன. 24

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் தலையிட மாட்டோம் என்று இந்தியாகை கழுவி விட்டுள்ளதால், வேறு நாடுகள் மத்தியஸ்தம் செய்ய முன்வந்தால் இந்தியா அதற்கு தடையாகத் இருக்காதா என்று இந்திய வெளியுறவு அமைச்சர் இந்திரகுமார் குஜ்ராலிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது.

''வேறு நாடுகள் மத்தியஸ்தம் செய்யலாம் அல்லது செய்யாமல் விடலாம். நடக்காத ஒரு காரியம் குறித்து எப்படிப்பதில் கூற முடியும்''? என்று குஜ்ரால் பதில் அளித்தார்.

கடந்த 20 ஆம் திகதி பாக்கு நீரிணையில் இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர் சுட்டுக் கொல்லப்பட்டமை குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளித்த குஜ்ரால், இலங்கை கடற்படை சுடவில்லை என்று இலங்கை கூறுகிறது. இலங்கைக்கு நான் விஜயம் செய்துள்ள இந்த நேரத்தில், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை சீர் குலைக்க நடந்த செயலாகவே இதை கருத வேண்டியுள்ளது என்றார்.

இலங்கை — இந்திய நட்புறவு ஒப்பந்தம் ஒன்றைச் செய்வது குறித்து பேசப்படவில்லை என்றும் குஜ்ரால் தெரிவித்தார். (இ-3-150)

## பங்கீட்டுக்கு 3 கிலோ சீனி

யாழ்ப்பாணம், ஜன. 24

ஒவ்வொரு குடும்பத்துக்கும் 3 கிலோ சீனி ப. நோ. கூ. சங்கக் கிளைகள் மூலம் விநியோகிக்கப்படவிருப்பதாக செயலக புனர்வாழ்வுப் பகுதி தெரிவித்துள்ளது.

ப. நோ. கூ. சங்கங்கள் இந்த சீனியைப் பெற்று உடனடியாக மக்களுக்கு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளன. (இ-3)

## திருப்பலி விழா

தென்மராட்சி, ஜன 24

கடந்த மாதம் கண்டியில் குருவாக பட்டம் பெற்ற அருட்திரு தி. சூசைநாதர் அடிகளின் முதற் திருப்பலி விழா நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கொடிகாமம் கச்சாய் புனித பேதுரு வானவர் தேவாலயத்தில் பங்குத்தந்தை அருட்திரு பீற்றர் துரைரத்தினம் அடிகளாரின் தலைமையில் நடைபெறும். (இ-117)

## நாளை

**தை 12**

**சனிக்கிழமை**

திதி: துதியை பின்இரவு 1.29 வரை.

நட்சத்திரம்: ஆயிலியம் பிற்பகல் 1-23 வரை.

ராகுகாலம்: 9.36-11.06

சுபநேரம்: - 3.36 5.06

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# சுவாமி ஜி கொழும்பு...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வணங்கும் நீங்கள் [illegible] திரமல்லாமல் எல்லா உயிர்களிலும் அவ[illegible]னைக் காண்பீர்களோ அப்பொழுதுதான் உங்கள் பக்தி பூரணமாகும்.

ஹரியை எல்லோரிடமும் எங்கும் காண்[illegible] ஹரியின் உண்மையான பக்தனாவான். நீங்கள் சிவபெருமானுடைய பக்தர்களாக விருந்தால் அவரை எல்லா உயிர்களிலும் எங்கும் காணவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கனகசபை கணேசன்

(C. T B. லிகிதர்)

கரவெட்டி வடக்கு வாசகரும், பருத்தித்துறை இ. போ. சபை லிகிதருமான கனகசபை கணேசன் 22 - 01 - 1997 இல் காலமானார்.

இவர் உமாதேவியின் அன்புக் கணவரும், உமாநேசன் (பொறியியல் மாணவன் - ஆஸ்திரேலியா), சிவநேசன் (N. T. D மாணவன் மொறட்டுவ பல்கலைக்கழகம்), ஜெயசுதா (1996 A/L கணிதப் பிரிவு மாணவி, யா / மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), சுகந்தா (யா / மெதடிஸ்த பெண்கள் கல்லூரி பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகம்மா, கமலம், ராணி, ரதி ஆகியோரின் அன்புக்குரிய சகோதரரும், இரத்தினகுமாரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விலரம் பின்னர் அறிவிக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
இ. இரத்தினகுமார்
(மைத்துனன்)

அந்திரான்,
கரவெட்டி வடக்கு,
நெல்லியடி, கரவெட்டி

(சி/3993)

## செல்வி சின்னத்துரை கலாரஞ்சினி

புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்வி சின்னத்துரை கலாரஞ்சினி 22-01-97 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இளையதம்பி சின்னத்துரை மற்றும் பார்வதி ஆகியோரின் அன்பு மகளும், நாகமுத்துவின் பெறாமகளும், லோகதாசனின் (பிரான்ஸ்) சகோதரியும், திலகேஸ்வரியின் மைத்துனியும், சஞ்ஜீவனின் மாமியாரும், பொன்னாச்சியின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியை 23-01-97 வியாழக்கிழமை புங்குடுதீவு கேரதீவு மயானத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்றது. இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
கு. சந்திரன்
(கிராம அலுவலர்,
புங்குடுதீவு)

புங்குடுதீவு – 5

(44858)

## தம்பையா வேலுப்பிள்ளை

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பையா வேலுப்பிள்ளை 23 - 01 – 1997 வியாழக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும் சந்திரம்பிள்ளை, றட்ணசிங்கம் (தாதிய உத்தியோகத்தர், அரச வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற சீவரட்ணம் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், பரமேஸ்வரி, லலிதா, சீவரட்ணம் பரமேஸ்வரியின் மாமனாரும், வசந்தநாதன் (கொழும்பு), இந்திரா, சாரதா, இன்பநாயகி, தேவகி (சுவிஸ்), மதி தேவி, மகாதேவி, றகுபரன் (ஜேர்மனி), றகுராகவன் (கொழும்பு), றகுராஜன் (ஸ்ரான்லி கல்லூரி, உ. தரமாணவன்), தயாளன், தர்மினி, தர்சன் ஆகியோரின் பேரனுமாவர்.

அன்னாரின் பூதவுடல் இன்று 24-01-97 வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணியளவில் காரக்கால் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வேலுப்பிள்ளை றட்ணசிங்கம்
(மகன்)

நாகபூஷணி அம்பாள் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டவில்.

(44867)

## பொன்னம்பலம் மகாராசா

(ஓய்வுபெற்ற இலிகிதர், நீர்ப்பாசனத் திணைக்களம்)

பொன்னம்பலம் மகாராசா அவர்கள் 23 - 1 - 97 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் (ஓய்வு பெற்ற ஆசிரியர் யாழ். இந்துக் கல்லூரி), நல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கிருபாதேவியின் அன்புக் கணவரும், பவானிதேவி (ஆசிரியர், திருக்குடும்ப கன்னியர்மடம், யாழ்ப்பாணம்), விக்னேஸ்வரன் (Oxford Export Garments Industries-Ratmalana), காலஞ்சென்ற பாலேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பா. சிவபாலன் (நீதி உதவியாளர், கோட்டக்கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம், வேலணை, ஊர்காவற்றுறை), வசந்தராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவசத்தியா, சிவப்பிரசாந், சிவசெந்தூரன், தினேஸ், றொமேஸ், நரேஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (24 - 1 - 97) வெள்ளிக்கிழமை இல. 214/4சி, இராமநாதன் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பா சிவபாலன்

(44869)

# தூத்துக்குடியில் இருந்து வரும் வத்தைகளுக்கு தனித் துறைமுகம்?

## கொழும்புக்குப் பதிலாக

கொழும்பு, ஜன. 24

தூத்துக்குடியிலிருந்து கொழும்புக்குப் பொருள்களை ஏற்றி வரும் வத்தைகளைப் பயன்படுத்தி கொழும்புத் துறைமுகத்துக்குள் ஊடுருவி அதனைப் புலிகள் தகர்க்கக் கூடும் என இலங்கை அரசு அஞ்சுவதால் —

தூத்துக்குடியிலிருந்து வத்தைகளில் ஏற்றி வரும் பொருள்களை இறக்குவதற்கு கொழும்புக்குப் புறம்பாக வேறு துறைமுகம் ஒன்றை அமைப்பது குறித்து இலங்கை — இந்திய அதிகாரிகள் விரைவில் கூடி ஆராய்வர்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று முன்தினம் கொழும்பில் இதனைத் தெரிவித்தார்.

தூத்துக்குடியிலிருந்து வரும் வத்தைகளை கொழும்பு துறைமுகத்துக்குள் அனுமதிப்பதற்கு கடந்த டிசம்பர் முற்பகுதியில் இலங்கை அரசு தடை விதித்ததும் —

பின்னர் இந்த மாத முற்பகுதியில் அது நீக்கப்பட்டதும் தெரிந்தவையே.

(உ-4)

# மகா சங்கத்தினரைத் தாக்கும் பிரசாரம் நிறுத்தப்பட வேண்டும்

## ஐ.தே.க. பிரமுகர் அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 24

மகா சங்கத்தினருக்கு எதிராக அரச தொடர்புச் சாதனங்கள் பிரசாரம் செய்து வருகின்றன. இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

ஐ. தே. க. பிரமுகரான கருணசேன கொடித்துவக்கு மேற்கண்டவாறு அரசைக் கோரி உள்ளார்.

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுக்கு மகா சங்கத்தினர் பிரித் ஓதுகிறார்கள் என்று சில அரச தொடர்புச் சாதனங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

மகா சங்கத்தினருக்கு எதிராகப் பேசுவது பெரிய பாவம் ஆகும்.

விடுதலைப் புலிகள் முல்லைத்தீவைத் தாக்கி ஆயுதங்களை எடுத்து அவற்றைக் கொண்டு பரந்தனைத் தாக்குகிறார்கள் அங்கே.

ஆனால் இங்கே அரசாங்கமோ மகா சங்கத்தினருக்கு எதிராக குரல் எழுப்பி அவர்களைப் பிளவு படுத்த முனைந்து நிற்கிறது.

இந்த விடயத்தில் ஜனாதிபதிக்கு முதிர்ச்சி போதாது போல் இருக்கிறது.

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க நல்ல முதிர்ச்சி பெற்றவர் அவராவது தலையிட்டு மகா சங்கத்தினருக்கு எதிரான தாக்குதலை நிறுத்த வேண்டும்.

இப்படி கருணசேன கொடித்துவக்கு மேலும் கேட்டுள்ளார். (இ-3-150)

## பீற்றர் கெனமன் காலமானார்

இலங்கையில் இடதுசாரி இயக்க முன்னோடிகளில் ஒருவரும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவருமான பீற்றர் கெனமன் நேற்றுப் பிற்பகல் தனது 79 ஆவது வயதில் கொழும்பில் காலமானார்.

முதலாவது நாடாளுமன்றத்தில் கொழும்பு மத்திய தொகுதி அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்ட அவர் 1957 ஆம் ஆண்டு வரை கொழும்பு மாநகரசபை அங்கத்தவராகவும் சேவையாற்றி இருந்தார்.

1952 ஆம் ஆண்டிலும் 1957 ஆம் ஆண்டிலும் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் பீற்றர் கெனமன் கொழும்பு மத்திய தொகுதியில் முதலாவது அங்கத்தவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவர் 1960 ஆம் ஆண்டு மார்ச் மாதமும் ஜூலை மாதமும் நடைபெற்ற தேர்தல்களில் அத்தொகுதியில் இரண்டாவது அங்கத்தவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1970 ஆம் ஆண்டு ஸ்ரீமாவோவின் அரசாங்கத்தில் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சராகப் பதவி வகித்தார்.

இவரது மரணச்சடங்குகள் 27 ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பு கனத்தை பொது மயானத்தில் நடைபெறும். (இ-5)

# கிபிர் விமானங்களை சேவையில் ஈடுபடுத்துவது தற்காலிக நிறுத்தம்

கடந்த செவ்வாய்க்கிழமை நீர்கொழும்பு வாவியில் கிபிர் விமானம் விழுந்தது தொடர்பான இஸ்ரேலிய நிபுணர்களின் அறிக்கையைப் பெறும் வரை விமானப்படையினரிடம் உள்ள ஏனைய கிபிர் விமானங்களை யுத்தத்துக்கு பயன்படுத்துவது சாத்தியப்படாது என்று படை வட்டாரங்கள் தெரிவிப்பதாக 'த ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நீர்கொழும்பு வாவியில் வீழ்ந்த கிபிர் விமானம் போன்ற பல விமானங்களை இலங்கை அரசு இஸ்ரேலிடம் இருந்து கொள்வனவு செய்திருந்தது.

இந்தரக விமானங்கள் வடக்கு — கிழக்கு யுத்தத்துக்கு பயன்படுத்தப்பட்டு வந்தன.

இவற்றில் ஒன்றே நீர்கொழும்பு வாவியில் வீழ்ந்துள்ளது.

இஸ்ரேலிய நிபுணர்களை இலங்கைக்கு அழைத்து இந்த விபத்து பற்றி ஆராய்ந்து காரணத்தை அறிய முடிவாகியுள்ளது.

''கிபிர்'' விமானத்தை ஓட்டுவது குறித்து இஸ்ரேலிய நிபுணர்கள் இலங்கை விமானப் படையின் விமான மோட்டிகளுக்கு விசேட பயிற்சிகளை அளித்திருந்தனர்.

அதேவேளை — கடந்த வருடம் விமானப்படை 9 விமானங்களை இழந்திருந்தது. அவற்றின் பெறுமதி 89 கோடி ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இப்படி அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

(இ 3-150)

## தெரிவுக்குழுவின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் பீரிஸ், செயலாளர் பாலபட்ட பெண்டி ஆகியோரும் பேச்சின் போது பிரசன்னமாக இருந்தனர்.

இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை அரசாங்கத்தின் திட்டமாக வைக்க நாம் விரும்பவில்லை. அரசின் தீர்வுத் திட்டம் என்று சொந்தம் கொண்டாடவும் விரும்பவில்லை. சகல கட்சிகளின் இணக்கத்துடனேயே தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி பேச்சுக்களின் போது தெரிவித்தார்.

தீர்வுத் திட்டம் குறித்து ஐ. தே. கவுடன் தாம் நடத்திய பேச்சின் விவரங்களை எடுத்துக் கூறிய தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகள் தீர்வுத் திட்டத்தில்உள்ள சர்ச்சைக்குரிய அம்சங்கள் குறித்துத் தொடர்ந்து ஐ தே. கவுடன் பேசித் தீர்வுகாண வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டனர்.

உள்ளூராட்சித் தேர்தல்கள் இந்தப் பேச்சுக்கள் தொடரத் தடையாக இருக்கும் என்றும் —

அதனால் தேர்தலை ஒத்திப்போட வேண்டும் என்றும் தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டன.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி — உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திப்போடமுடியாது. தேர்தலை நடத்தவில்லை என்று அரசு மீது அபகீர்த்தி ஏற்படுத்தப்படுகிறது. ஆகவே தேர்தலை நடத்த வேண்டும் என்பதில் மாற்றமில்லை.

அதிகாரப் பரவலாக்கல் குறித்து விவாதிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் பணிக்காலஎல்லையை மார்ச் 31 ஆம் திகதியிலிருந்து மேலும் 2 மாதத்துக்கு நீடிப்போம் — என்றார். (அ-3-150)

## தாக்குதல்

முல்லைத்தீவு அலம்பிலில் உள்ள கடற்பகுதியில் நேற்று அதிகாலை புலிகளின் படகு ஒன்று நிர்மூலமாக்கப்பட்டதாகவும் —

நான்கு புலிப்போராளிகள் கொல்லபட்டதாகவும் — பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

## வை- 12 ஐ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆவது வார்ட்டில் உள்ளார்.

அதிர்ச்சி நிலையில் இருந்து இப்போதுதான் சாதாரண நிலைக்கு திரும்புகிறார். ஆபத்து கட்டத்தை அவர் தாண்டி விட்டார். அவரிடம் இருந்து வாக்கு மூலம் பெற்ற பின்பே விபத்துக்கான காரணத்தைக் கண்டுபிடிக்கலாம் என்றும் அவர் கூறினார்.

(இ-3-150)

## மூழ்கிய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் மற்றும் றொக்கட்டுக் கணை அகற்றும் பணியில் விமானப்படையின் விசேட பிரிவு ஒன்று ஈடுபட்டுள்ளது.

(இ- 150- 3)

## பொறுமைக்கும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாம் இது பற்றி முறைப்பாடு செய்தோம். மத்திய அரசு மூலமாகவும் எடுத்துக் கூறினோம். ஆனால் இப்படியான சம்பவங்கள் தொடர்ந்துகொண்டேஇருக்கின்றன.

இப்படி அவர் மேலும் கூறினார்.

இலங்கைத் தமிழர் தொடர்பாக மத்திய அரசு கொண்டுள்ள கொள்கையையே நாமும் கொண்டுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேட்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 24 - 01 - 1997 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org